முருகப்பெருமான் துணை

**மகான் பூதத்தாழ்வார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.08.2022, வியாழக்கிழமை

1. அருட்பெருஞ் சக்திமிகு வள்ளலே
அண்ணலே ஆறுமுக ஞானியே
அருட்சுடராய் ஞான வழி காட்டும்
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே அருளாசி தன்னை
குறைவிலா சுபகிருது யாளி திங்கள்
தெரிவிப்பேன் நவதிகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 09 நாள், 25.08.2022 வியாழக்கிழமை)
தேசிகனுக்கு பூதத்தாழ்வார் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உயர்விலா இடர்கள் தருகின்ற
மனமாயை வெல்ல வேண்டுமாயின்
மாதவ பலம் பெற்ற அரங்கமகா ஞானி
4. ஞானியரின் சத்திய வாக்கான
ஞானமாம் நாம செபதபங்களை
ஞானிகள் பூசையாகச் செய்து
நாளும் அன்னதானமெனும் சேவை
5. சேவை ஆற்றி வருதலுறவே
செயல்பாடுகள் அனைத்தும் இனி
அவயம் அனைத்தும் காக்கின்ற
அ(ஐ)ம்பொறி புலனை கட்டுப்படுத்தும் வண்ணம்
6. வண்ணமுடன் மேல் நிலை கூடி
வள்ளல் தன்மைதனை அடையும்
எண்ணமும் செயலும் தூய்மையாகி
எல்லாம் இறை அருளாகியதே எனும்
7. எனும் பரிபக்குவ நிலைகள் கூடி
ஏழாம் படைவீடான பிரணவக் குடிலின்
ஞானத்தொடர்பு மிகுதியாகியே
ஞானிகள் ஆசி அருள் பெறுவதுடன்
8. பெறுவதுடன் பேரறிவு எனும் தெளிவு
பிரம்ம ஞானமாகக் கை கூடி
ஆறுமுகக் கடவுளை வணங்குவதுடன்
அனைத்திலும் உயர் நிலை கண்டு
9. கண்டுமே கலியிடரை கடந்து
கடைக்கோடி ஞானியருள் ஞானியராக
தொண்டுவழி தேற்றம் பெறுவர்
தேசிகனால் மாற்றம் அடைவர்

10. அடையவே அரங்கமகானின்
அருள்தரும் ஞானத்திருவடி
மடைதிறந்த வெள்ளம்போலே
மக்களை நோக்கி வருகை தர

11. தருகவே கலியுக மக்கள்
தக்க வாய்ப்பாக பெற்றுசேவித்து
தருமவழிகளை கடைபிடித்துவர
தவராஜனின் ஞானிகள் வழி ஞானிகளாவர்
அருளாசி முற்றே

–சுபம்–